1992 செப்டம்பர் 24]

களில் மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள நெய்வேலி, வடலூர், கம்மாபுரம், உளுந்தூர் பேட்டை, மங்களூர் போன்ற பகுதிகளிலிருந்து மாணவ மாணவிகள் விருத்தாசலம் அரசு கலைக் கல்லூரிக்கு வந்து கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கல்லூரி வகுப்புகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவிகள் உள்ளதால், அங்கே உட்காருவதற்குக்கூட இடமற்ற நெருக்கடியான சூழ்நிலை இருந்து வருகிற காரணத்தால், அந்த நெருக்கடியைப் போக்குவதற்கு,—தமிழகத்தில் பல்வேறு நெருக்கடிகளைத் தீர்த்து, எல்.டி.டி.ஈ. நெருக்கடியை ஒடுக்கிக்கொண்டிருக்கும் வீரத்தாய், இதயதெய்வம், டாக்டர், புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே கூடுதல் கட்டிடங்களை வழங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அத்துணை காரணங்களின் அடிப்படையிலேதான் அந்தக் கல்லூரியினுடைய தேவைக்கேற்ப கட்டிடம் கட்டுவது என்கிற கருத்துரு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

67—

ஜவ்வரிசி தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்துதல்.

9486—திரு. கே. கந்தசாமி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிப்பதால், தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்கும்போதே கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்த உரிய ஏற்பாடுகள் உள்ளதா என்பதை கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 செப்டம்பர் 24

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சவ்வரிசித் தொழிற் சாலைகளுக்கு ஒப்புதலை வழங்கும்போது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சவ்வரிசித் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் சுற்றுப்புறச் சூழ்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கின்ற வகையில் அந்த இடத்தில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் துர் நாற்றத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கவேண்டும் என்று சொல்லி மாசுக் கட்டுப் பாட்டு வாரியம் வலியுறுத்தி வருகிறது. ஆனால் பொது சுத்தி கரிப்பு நிலையம் அமைக்கின்ற வாய்ப்பு அனேகமாக சேலத்தைப் பொறுத்தவரையில் இருக்காது. அங்கொன்றும் இங்கொன்று மாக அந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால் அதை அமைப்பது என்பது கடினம். எனவே, மாசுக் கட்டுப் பாட்டு வாரியத்தின் மூலமாக, அந்தந்தத் தொழிற்சாலைகளிலே சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகவும் அதிகமாக சேலம் மாவட்டத்தில்தான் 800 சவ்வரிசித் தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் பக்கத்தில் குடியிருக்கும் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். அதுமட்டுமல்ல, சவ்வரிசித் தொழிற்சாலைகள் இருக்கும் அந்தப் பாதைகளில்கூட நடந்து செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுகிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஏற்கனவே இந்தப் பிரச்சினையை அணுகிக் கொண்டிருக்கிறது. அதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அடிப்படையாக வைத்து, தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அறிவுரைகள் வழங்க லாம்.

1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 68, திரு தா. வேடியப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

68—

திருவண்ணாமலையில் புதிதாக போக்குவரத்துக் கழகம்.

*11748—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலையில் புதியதாகப் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:,

இல்லை.

முற்பகல் 10–05

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை என்றாலே தீபச் சுடர் ஏற்றும் ஒரு புனிதத் தலமாகும். ஆனால் இன்றைய நிலையில் தமிழகம் என்றாலே நம்முடைய ஒளி விளக்காம் புரட்சித் தலைவி அவர்கள் அவர்களுடைய புனித ஆட்சியில் எங்களுடைய பிற்படுத்தப் பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் தலைநகரமான திருவண்ணாமலையில் ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த அரசு மறு பரிசீலனை பண்ணுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைத்து மூன்று போக்குவரத்துக் கழகங்களாக இன்றைக்கு நாம் பிரித்திருக்கின்றோம் அதிலே கொஞ்சம் பேருந்துகள், இதிலே குறிப்பிட்ட பேருந்துகளை எடுத்து, காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த மண்ணில், மாண்புமிகு நம்முடைய மறைந்த முதல்வர் புரட்சித் தலைவருடைய பெயரால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அந்தப் போக்குவரத்துக் கழகத்தை 10 மாத காலத்திலே உருவாக்கியதன் வாயிலாக புதிய போக்குவரத்துக் கழகத்தை அந்தப்பகுதியில் உருவாக்குவதற்கு வாய்ப்பில்லை.